திருச்சிற்றம்பலம்

ஸ்ரீ ஞானஸம்பந்த குருப்யோ நம.

# திருவொற்றி முருகர்

# மும்மணிக்கோவை.

[illegible]
[illegible]
[illegible]

இது,

சென்னைக் கிறிஸ்டியன் காலேஜ்

தமிழ்ப்பண்டிதர்

நாகபட்டினம் - வேதாசலம்பிள்ளையால்

இயற்றப்பட்டு,

திருப்பதூர் - ஸ்ரீமான்

கல்யாணசுந்தர நாடார் அவர்களால்

சென்னை:

சின்னையநாடார் அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

---

1900-௵

திருச்சிற்றம்பலம்.

# திருவொற்றி முருகர் மும்மணிக்கோவை.

## நூல்.

### நெஞ்சொடுகிளத்தல்.

நீர்வளங் கவின்ற சீர்வளர் பழனத்து
நெற்குரல் கௌவிய நற்குரற் பைங்கிளி
யானற் காவிற் றன்விழைந் தெய்திப்
பொன்வீ ஞாழற் பொலிந்தினி திருப்பவுங்
கருங்கழி வாரிய பெருமீன் குவைஇ
வன்றிறற் பரதவர் முன்றிற் றுறு முணங்குந்
துடிக்கட் டுணியல கொடிக்குலங் கவர்ந்து
மருதங் காவிற் பெரிது வைகவுங்
குளனுறை வாழ்க்கை வளர்நீர்க் கோழி
மனையுறை நீங்கித் துணைகூப் பெயர்ந்து
கால்வழி யோடிக் கழியிற் சேரவும்
புலவுமண முனைஇய நிலவுறழ் குருகு
கண்ணகன் விசும்பி னண்ணிய முகின்மே
லிவர்ந்தெழு திங்கள் போலப் பரந்தெழு
துணிநீர்த் தடத்தின் மணமல ராரு
மிரும்புதிரித் தன்ன வறன்மருப் பெருமை
கரும்புற மருங்கி னெருங்கி நிற்பவும்
பொறிகெழு வாளை வெறிபடப் பாய்ந்து
முடைக்கழிச் சுறவொடு கறுவொடு மறியவுங்
காலெதிர்ந் தோடுங் கழிக்கயன் மருதச்
சேலொடுங் கூடிச் சேர்ந்து துள்ளவு
முழுநெறி யவிழக் குழுவொடு கொழுதிப்
பொன்னந் தாமரைப் பொலந்துகள் வாரிக்
கோழி முட்டை போழ்படுத் தாங்கு

வெள்ளயிர்க் கானற் கொள்ளையின் வீசவும்
வெள்ளிவெண் டோட்டுத் தாழையி னளைஇக்
கையரிக் கொண்ட கடற்கா லோடி
நீறுமெய் பூத்த நிமலன் போலச்
செந்தா மரைகள் சிறந்தினிது விளங்க
வெண்பொடி வீசிப் பண்பொடு முலாவவுந்
தேமொழிச் செவ்வாய்த் திருமுக வுழத்தியர்
காமரு கொழுஞ்சுவை வாழையின் பழனும்
புன்செய் பயந்த பன்னிறப் பயறு
நன்செய் பயந்த பொன்னிற மணியும
வட்டிகைப் பெய்து கட்டிய சுமட்டி
னெடுத்துச் சென்றங் கடுத்துயர் பாக்கத்துக்
குமிழிடை யுகளு மமைவிழிப பரத்தியர்
பகுத்துணர் வினறி மிகுத்துக கொடுத்த
தாளமு மீனு நிரல்பட வளர்ந்துகொண்
டுவப்பொடு பெயர்ந்துதம் மிருக்கை சேரவு
மருதமு நெய்தலு மயங்கிய மரபி
னுலக மெல்லா மொருங்குவந் துறினுந்
தொலையா வளத்தொடு நிலவுறு வைப்பி
னொற்றி மாநகரக் குற்றகண் ணெனவு
மக்கணி னுள்வள ரருமணி யெனவும்
மம்மணி யுள்ளுறை பாவையை யெனவும்
பாவையி னகத்துப் பண்புபல காட்டி
மேவி யாங்கது புடைபெயர்ந் தியங்கத்
தக்க வாறு மிக்கது புரியு
மோரியல் பிலலா வாருயி ரெனவு
மிருவே றுலகினு மிரண்டற விரவி
யறிவுந் தொழிலு நெறியுற விளக்கு
மாதொரு கூறற் கோதிய முதல்வன்
செல்லலுற் றழுங்கிய மல்லற் றேவர்
குழாமபெரி துய்ய வழாவே லோச்சிப்
பாடில் குருக்கு வீடு நல்கி
வேந்தன் பயந்த கூந்தற் குமரியை

# மும்மணிக்கோவை.

மணந்துல களித்த நிணந்திகழ் வேல
னையன் செய்யன பன்னிரு கையன்
வறியே மிடுமைப் பொறிபடுத் தெதிரும
பெரியோன் பெரிய ரறிவினுக் கரியன
றிருவுரு வொருமையி னெழுவித தருமையொடு
வழிபா டியற்றி விழிநீ ருறைபப
வன்புரு வாகி யின்புற லறியாது
புன்பொருள கவருமென மின்புணர் மனனே
வரமபறு மாறற னிரமபிய முருகன்
றனெழுந் தருளும வானகுடி லாக
நின்னைத் தந்தன னாகப் பின்னை
மண்டிரி வாகக கண்டன சிலவும
புனறிரி வாகப புகுவன சிலவே
மனறிரி வாக வடைவன சிலவும
வளியிட னாகத தெளிவன சிலவும
விசும்பிட னாக வசும்புன சிலவே
மோவா திருப்ப மேவுனை யதனாற்
றுன்பமுங் கவலையு நின்புற னாக
வின்புற லறியா திடாப்படு குனையே யதாஅன்
றுறு துணை யாகச செறியு மென்னையும
புற்சாய்த் தோடும புனலே போல
நின்வழிப படஇ யென்னுயிர்க் குயிரா
மறுமுகத் தையனை மருவலொட டாது
வன்மை செய்தநின புன்மையோ பெரிதே
யினிநீ யிங்ஙன மொழியாது பனிமலர்க்
கடம்பு சூடிய தடந்தோண் முருகன
றிருவுருப பொதியு மொருகல னாக
விழுமிதி னீடு வாழ்மதி கொழுவிய
நலங்கெழு நறும்பால பெய்த
பொலங்கலம் பொலியும் பெற்றியா லெனவே.

## அருளியல்புரைத்தல்.

பெற்றி யரிய பெருமான் பெரியதிரு
வொற்றி நகர்வந்த வொளவேலா—னற்றவருங்

காணு வரிய கழலா னெனதுளத்து
நாணு தமர்ந்தவா நன்று. (௨)

காமமிக்ககழிபடர்கிளவி.

நின்றன் றுனக்குத் திருவொற்றி வேலரை நாடியிட
ரின்றிஙகு நீகொள்ள லென்றுரை யீரக வீர்ஙகழிகாண்
மின்றஙகு நொய்சிறை வண்டினங காளினி மேலெமக்கு
நின்றிங்கு நீர்செய்யு நன்மையென னோவொன்று நோவதின்றே.

தோழிவிரவிக்கூறல்.

நேரிழை முன்கை வாரொலிக் கூந்த
லரிகடை யொழுகிய பெருமதர் மழைக்க
ணிலவுறழ் செவ்வாய் நிலவுறழ் திருநுதற்
கொடிபுரை மருங்குற் கடிதிகழ் மேனிக்
கரும்பினு மினியவென் னருமபெறற் பாவாய்
வழிவழிச் சிறக்குமெங் கழிபெருங் குலத்திற்
பாற்கடற் றோன்றிய சீத்திரு வனையாய்
வலம்புரி யன்னவெங் குலம்புரி கோமக
ளரிதி னீன்ற பெருமுத் தனையாய்
மிடியறி யாவெங் குடியெனு முற்றத்
தன்புநீர் பாயத்தி யின்புறக் கைசெய்
தாயமு மியானுஞ் சீரிதின் வளர்க்கு
நற்பயன் கனிந்த பொற்சுடர்க் கொடியே
நக்கும புகக்கு மிக்கமகிழ் செய்யுஞ்
செயிரற வெழுதிய வுயிரோ வியமே
யருமையின் மிகுந்தவெம் பெருமுதற் றந்தை
யாற்று விருப்பொடு மேற்றிப் பார்க்கும்
விளிவற விளங்கிய வொளிமணி விளக்கே
நின்னரு ளடித் துன்னி நின்றிங்
கடியேன் கூறு மொடியாச் சிறுமொழி
யறிதென வொழியா தறிவுகொள்ளல வேண்டும
வயலுழவர் குவளைகட்டு
வியல்வரமபிற் றடிந்திட்ட
கயலினிடைப் படவெறிய

## மும்மணிக்கோவை.

மருதமகள் கருவிழிபோற்
பொருவின்றித் திருவிளங்கச
செந்நெல் வித்திய பொனனுறழ் வான்முளை
புரியவிழத் தலைவிரிந்து
பைத்தெனனப பரந்திருப்பத்
தெள்ளொளிய பளிங்கி னுள்ளுயிர் பெய்து
பாசிலையுஞ் சேதாமப லுங
கட்குவளையு முட்டாமரையு
மொருங்குபட வெழுந்து மருங்குவைத தாங்கு
நற்பூங் கயங்கள் பொற்பொடு மிமைப்பத்
தண்ணடை மருவிய தணிபா விளையு
ளொறறிமா நகரின் முற்பட வமர்ந்த
வுடகுடை முருகனைக் கடகண் டாங்குப்
பாரத்தாளுப பரிலவடிவி
னோத்தாளு வரனுணாவிற்
சொலலாளுப் பலபுகழிற்
றொடொட வீழந்த கையன றோடொடு
பொன்ஞாண பிணித்த வில்லன் கணையன
மின்ஞாண பிணித்த குஞ்சிய னிளைஞ
னரியன் பெரியன் றிருவளா செலவன்
குடியினுங் குலத்தினும் வடுவொன் றிலலான
பெறுவதொன் றுடையன் போல மறுவந்து
பன்று ளொளினுமென் சொன்னிலை தவறுன்
குறித்தது கிளவாது செறித்தலுஞ் செறிப்ப
னுருமு முளியமு மரவும் பிரியா
வாரதர் நீந்திச சிறிதிற போந்து
திரிதரு நாள்களும் பலவே யொருநாணம
மலையகன சாரற் றலைமையொடு பொலியு
மாரா மத்தினீ வாரா யாக
வொருதனிச் சென்றேன் பரிவொடு புகுந்து
பானிர் வாவியின் மேவி நிறப வவனுமாண
டெய்தியெனை ஞெருங்கின் றனனே நொய்திற்
றிரைபொரு கரையிற் புரையின் றோங்கிப்

பசுங்குழை கலித்து நசைநனை யரும்பித்
தென்றலொடு புகுந்த வண்டிசைப் பாண
னினிமையின் மிழற்றுந் தனியிசைக் குவந்து
பொதியவிழ் மலரின் மதுவுணக் கொடுத்து
நினைதொறுஞ் சுவைக்கு நீனிறக் கனிக
ளிலைதொறுங் குழீஇ நலமிகப் பயக்கு
கோழரை நாவல் கோட்டி னுருப்பப்
பாலிடை விழூஉ நீலமணி கடுப்ப
வாயிடை விழூஉ மருந்துசுவைக் கனிக
ளளையிடைத் துஞ்சு மருமபெடைக் களிப்ப
வேப்பின் கொழுநனை யேய்க்கு நெடுங்கட்
கவைக்கா லலவ னுழையிடை யிடுக்கி
யன்புடன் சென்றுங் கருத்த னோக்கி
யென்னையு நோக்கின னனனது நோக்கின
னுய்குவ தறியான போலச் செய்குவ
தொன்றுங் காணா தனனுநின் றனனே
நீகண் டனையே னெஞ்சநெக் குருகி
யின்னுயிர் வாழலை யன்னை கொன்னுறு
பேய்கண் டனைய பெற்றிய ளாகி
நிறையு மறிவு முறைமுறை சாயத்
துன்றுநிலை நீங்கா மரமபோற்
கன்றிய நோக்கமொடு நின்றவ னிலையே. (௪)

### தோழிமுன்னுறவுணர்தல்.

நிலையுந் திரிந்து நிறையுங் கடந்து
தலையுங் கவிழ்ந்த தகையாண் - மலைநிவந்த
தென்னப் பொலியு மெயிலொற்றிச் செவ்வேண்மேன்
மன்னுங் கருத்துடைய மாது. (௫)

### பிரிவாற்றாத்தலைவிக்குத்தோழிகூறல்.

மாதே பெரிதும் வருந்துவ தென்னை மனந்திரிந்த
லேதே யறியிற் கொடுமையன் றேவன்னை யிரும்பொதும்பிற்
சூதேய் துணைமுலை யாகந் தழுவித் துயர்மிகுத்த
போதேர் பொழிலொற்றிச் செவ்வேள் வரையப் புகுந்தனனே.

### இணநலனுரைத்தல்.

புகலரு நுழையிற் போக்கரும் பொருள்போ
லிகலறு சைவத் திறஞ்செலா நெஞ்சினர்
நெறிப்படு மக்கட் கறிவு பேதுறுக்குங்
கவலையிற் பிறரை மயக்குந ருவவிடு
பதுக்கையிற் புன்பொரு ளகத்திடு கரவினர்
புனைமாண் கோதை பொருந்தச் சூட்டியும்
வினைமாண் விளங்கிழை வீறுபடத் திருத்தியுங்
கொழுங்கயன் மழைக்கண் பிறழ்தொறு மனந்திரிந்து
செழுந்துவர்ச் செவ்வாய் முத்தங் கொண்டு
நசைபிறக் கிடாது முலைதழீஇச் செல்லு
நெஞ்சமர் காதலர் பின்செலு மடவார்
பஞ்சின் மெல்லடி பைதலுற் றுழப்ப
வுறுத்துக் கிழிக்கும் பரல்கெழு முரம்பிற்
புலியத ளுடுக்கை தைஇ வலிகெழு
மூவிலை வடிவே லொருவயின் விளங்கக்
கொன்றைநனை பிணைத்த மன்றலந் தொடலை
பவளமலை புரையு மார்பிற் றுவள
மலைதரு மடநகை குறங்கின்மிசை யிருந்து
வலம்படு கையாற் பெரும்புறங் கவைஇ
யுலம்படு திரடோ ளொருமுலை யொற்ற
நரையே றூர்ந்த புரைசா லேற்ற
நினைதொறுங் குழையு முரவோர்க் குவகையுங்
கேடுபுரி நெஞ்சிற் பீடிலா வமணர்
பீடுயர் செந்தமிழ்க் கூடலிற் றோன்றிய
பொய்படு புன்பொருள் கானறிருள் பரப்பி
மெய்தரு சைவ நன்னெறி பிழைப்ப
மாறு வழிப்படூஉங் கூன்பாண் டியனமுத
லாறுசென் மாக்களைச் சூறைகொண் டெறிந்து
பெருந்துய ருறுக்குங் காலை யருந்தவ
நிற்பெறு பொருளிற் பற்பக லாற்றி
வேண்டிய பெரியோர்க்கு வேண்டியாங் களிப்பக்
கருக்குழிக் கிடக்குந் தன்மையை யன்மையி

னுருப்பெற வருகுழை போல வவரகத்
தொருபெரு மாயம பெருகுற ச செய்து
புறம்பெயர்க் தெயதி யறந்தரு பெருமைச
சண்பையிற் றோன்றினை மாதோ பின்பு
கிண்கிணி யொலிப்பத் தந்தைபிற சென்று
தண்கழு நீருநு செந்தா மரையு
மொருஙகுதலை மயஙகிய பெருநதட மருங்கி
னரும்பெறற் றந்தையைத் தலைக்கூடினையே யதற்புற
முருக்குறழ வெண்ணகைப் பெருமபெய ரன்னை
கரும்புங் கனியும் பெருஞ்சுவைப் பாலுந
திருநதிய தேனு மொருங்குறக் கூட்டிக
குழைததெடுத் தனன விழைவுறு மரபின்
முலைபொழி யமிழ்தம வள்ளத் தூட்டப
பவளவாய் மடுத்துத் திவளொளி சிறநது
பழகுறு தந்தைக்கு மழலவிடை யமர்ந்த
தங்கையைத் தாயொடுங் காட்டிப பிணைறைக
காண்டகு திருவிளை யாடன் மாணடகச
செய்திற மறியா ருய்திற நோககிப
பற்பக லியறறிய பின்னர் முற்படாந்
தருந்தமி ழாய்நத பெருநதமிழ்க் கூடற்
குலச்சிறை முனிவ னெதிர்கொளச் சென்று
பாற்கடற் பிறநத சீாத்திரு வாகலி
னிருமுலைக் குடத்தி னொருவழி யடக்கி
மலைமக ளாதலின் முலைதால சுருங்க
வள்ளத் தேந்திய சிலலமு தருநதி
யானு வேட்கையின் வருவோ னிவனென
முலைமுகந் திறந்த வழிவழிப் போக்கிப்
பாற்கட லூட்டிய பவளச் செவ்வாய்த்
தென்னவன் றேவிசெழும பொன்போற் புதல்வ
னயினை யென்ப தறியத் தெருட்டி
வழுதி கொண்ட முழுநோய் தீர
வன்னை யூட்டிய வமிழ்தை யின்னுலரச்
செந்தமி ழாக்கித தந்தது கெடுத்துப்

பாற்படு பூதமு மேற்படு பொருளுந்
தன்வழிப் படூஉந் தன்மைய வாகலிற்
முன்பிறி தாகல வேண்டிற் றலைமயங்கித்
தந்தொழி றிரிந்து நநது மென்பது
மிழிக்கும பொருளுஞ் செழிக்கு மென்பது
நீரினு நெருப்பினுங் காட்டினை யொருதிறம
பனையினு மென்பினுங் காட்டினை மறுதிற மினியே
யறிவொளி கொளீஇப புரைநெறிப பொய்சசமண்
முறிய நூறி மெய்த்திறங் கிளக்கு
மெய்ப்பொருட் சைவ மெய்வகை விளக்கிப்
பரங்குன் றமர்ந்தனை மாதோ வதுபெயர்ந்
திரங்குவா லருவி நிரம்பத் தோன்று
மாவினன் குடியி னசையினை மாதோ வதற்புற
மேரகத் தெழுந்தனை மாதோ நேரிது
னொருமொழி வைத்த வுட்பொருள விரிப்பத்
திருவளர் தணிகையி னமர்ந்தனை யதறபுற
நின்கழற் கிடந்த வருகா வன்பிற்
சைவம வளர்க்கு மெய்வகை மரபி
னுடல்பொரு ளாவி யுனக்கெனை நிறுவி
நிற்குறித் தெழூஉ மற்கு மினபதது
நின்பெய ரல்லது பிறிதொனறு நவிலா
மன்பெரும் புலவோன் றந்தையைக் காட்டுந்
தாயெனப் போந்து நாயினுங் கடைய
வென்னையு மொருபொருட படுத்து நின்னியல
பொருதுறைப் புகுத்தி யுரைக்கு முரவோன்
சோம சுந்தர தேசிகப் பெயரி
னேமுற வந்தோற் கருளக காமுறறுப
பொருளுட லாவி பொருள்பெற வழங்கி
வேண்டுழி யெல்லாம் விரும்பிநின் றேத்த
வவற்கெளி வந்த தவப்பெருந் தன்மையை
யொற்றியூர்ப் புகுந்து வைகினை முற்றவு
நின்பெருந் தன்மையை யறிந்து நின்னடி
யிரவொடு பகலு மொருவாது வணங்கி

நாத்தழு தழுப்பஃவேத்துரை கிளந்து
நெஞ்சநெக் குடைந்து மெய்விதிர் விதிர்ப்பப்
பெறுவதற கெளியே னரியே னாயினு
மவனொடு கெழூஉஞ் சார்பி னிவணது
சிவணவும் பெறுகுவெ னன்றே குவடுகெழு
பெருநிறப் பொன்மலை யடைந்த
கருநிறக் காக்கைக ளுறுவதா லெனவே. (எ)

### வள்ளன்மைகிளத்தல்.

உறுபொருள் காணு வுணர்விலார் மாட்டுப
பெறுபொருள் வேண்டல் பிழையா—னறுநெஞ்சே
யேந்துமுலை வள்ளி கொழுந னெழிலொற்றிப
போந்து குடியிருக்கும் போது. (அ)

### தலைமகடோழிக்கறத்தொடுநிற்றல்.

போதாயந்து வெண்ணில வொக்கும் பொடிமணற் பூஞ்சிற்றி
றேதாயரு ழுழ விழைத்தாடுங் காலை யொருவடிவேற் [லொன்
றுதான காளை திருவொற்றி யீசர் துணைப்புதல்வன்
காதாருங கண்ணி சிதைத்துக் கோடிக் கரந்தனனே. (௯)

### ஒப்புமைகூறியதணிலைவேண்டல்.

கரவறு மாந்தாக்கு விரவுறு பழியின்
மறுவொடு விளங்கு நிறைகதிர் மதியம்
வெண்கதிர் விரிக்குந தண்ணெனன் காலைப்
புலவுமணங் கமழும் பாக்கத் தூ நலங்கெழு
தெரிவின் மாககள் புரிதிமில் புகுந்து
நிரைநிரை வகுத்த வகையமை விளக்கம்
வான மீனின் வயின்வயி னிமைப்பவுஞ்
சிறுதுடி மருங்கிற் கருங்க ணுளைசிய
ரொழுவரு மெண்மரு முழியுழிக் கைபிணைந்
தொருவா மரபிற் குரவை யயரவு
மவர்தரு சிறாஅர் சிறுமீன் முகந்து
மணலகழ் கேணியின் முறைமுறை விடுத்தும
பொரிகெழு புன்னைப் பூந்துணர் வீழ்ப்பவ
புரிவளை யெறியக் கோடு தாக்கிப்

பலவே றுடைந்த நலங்கிளர் நித்திலங்
கொழுவிய நனையெனக் குஞ்சிப் பெய்து
வழீஇ வீழக கண்களுழபு பெயரவுங்
கொழுமட லவிழ்ந்த குழூஉக்கொள் கைதை
வான்சித ரளாய தேங்கம ழாமப
னீறுறு தழலே போலவும் பாலகெழு
குறுநடைப புதல்வா துவரிதழ் போலவு
மறிவின் மாசகடகு மறிவு பேதுறுக்கும்
புனையாப் பொற்பின முறைமுறை சிறப்பவு
நெய்தல் சான்ற கைதையங் கான
லொற்றியூ ரமர்ந்த வெற்றிவேற் குரிசில
கொன்றென் றுகிளக்குவென் கேண்மதி பெரும
நீயே, யருயிர்த் தொகுதிக்குப் பேறுதரல வேண்டி
யைந்தொழி லியற்றுவை மாதோ யானே
யொருநெறி யினறிப பொறிவழி யோடி
யைம்புல னுகாந்தாங கமைகுவெ னன்றே
நீயே, மக்கண்மேற் கொண்ட பொசசமி லன்பிற்
றூயே யனைய வளியினை யானே
மனைவியு மககளும பொருளெனக் கொண்டு
நினைவதொன் றிலலாப் பேரன் பினெனே
நீயே, யானைவெண மருப்புந் தேனி னிறாலு
மயிற்றழைப பீலியும விரைகமழ சாந்தமு
மொருங்குதலை மயங்கிய விரும்பெருங் குன்றத
தாறு துறையு மியக்கினை யானே
புலமில் கல்வியு நலமில் புகழும்
வழுவிய வொழுககமுங கழுவாக் குற்றமு
மொருவழி யமைந்து பெருகிய செருககெனுங
கோடுகெழு குன்றிற் பீடுறு குவெனே
நீயே, யறனெறித் தன்ன செறிகுழற் கற்றையும
பிறைசெறித் தன்ன நறைகமழ நுதலுங்
கயலிணைத் தன்ன வகலிரு விழியுங்
குமிழ்முகிழ்த் தன்ன வமைவரு நாசியும
பளிங்கி னன்ன துளங்கொளிக் கதுப்பும

வள்ளை யன்ன தெள்ளொளிச் செவியும்
குலிகந் தோய்த்த விலவுற ழிதழு
முறுவல் பூப்ப மின்னென மிளிருங்
குறுமுத தன்ன சிறுமுள் ளெயிறுங்
கொழுநீர்ப் பணிலத்து விழுமிய கழுத்து
மெமகககருண மரபிற் றமக்கமை கையுஞ்
சிவிறிவிரித் தன்ன சிறுதிரு வடியு
மெம்முள நீங்காச் செம்மையிற் றோன்ற
வீறுகெழு பகுதியின் வேறிரு மடவார்
கூறுகொண் டிருபுடை விளங்கச் சிறிய
மயின்மிசை வருகுவை மன்னோ யானே
கருநெறி மறமு மருகிய வறிவும
விரிவுறு மயக்கமுந் திருகிய சினமுந்
தொண்டர்ப் பணியா நாணமு மெண்டோண்
முக்கட் பெருமான் பெருமபுகழ் நக்குச்
சமையக் கணக்க ரமைவில கூறும்
புல்லுரை கொள்ளும் பொல்லாக் கிழமையும்
வெகுளியொடு படூஉந தகையின் மாற்றமு
மறிவோர் நகைபட மடவோர் திகைபபப்
பொருளொடு பொருந்தாப் புகுந்துசொன் மொழியு
முறுவரைப் பேணு தெழுமிறு மாப்பு
மெளிவந் தோரு மிரவன் மாக்களு
மழுவிளிக் கம்பலை கொள்ளக் குழைவின்றிப்
பழுதுறச் சென்றுங் கெறிந்துநகு முருடு
மறிவொடு படாஅச் சிறுதொழின் முறைமையு
நீங்கா மரபி னோங்கிப் பொலிய
யானென தென்னு கூனற் கிழத்தியர்
பெரும்புறங் கவவி வயின்வயி னமைத்து
மறந்தேர் வாழ்க்கை மயின்மிசைக் கொண்டு
சிறந்தோர் திறத்திற் சிவணுவெ னன்றே
நீயே, காந்தளங் கண்ணி யேந்திய மார்பத்துச
செஞ்சாந்து நீவிய சிறந்த கோலமொடு
குறவர் மகளிர் விழவொடு குழீஇ

மகளிரொடு விளங்குந் தகைசான் றுறத்து
வடிவே லேந்திக் கடிமயி லூர்ந்தென்
னுள்ளத் தாமரை வீள்ளவீற் றிருந்தனை
பகலொளி விளக்கும் பல்கதிர் ஞாயிறு
மலைநிவந் தன்ன நிலையுயர் மாடத்துங்
குடிக டங்காப பழியொடு மிடிந்து
வெருபபேய் சேர வெருக்கு முளைத்துப்
பாழ்படு பொலிவிலா வில்லினும்
போழ்கதிர் விரித்துப பொலிவதா லெனவே. (௰௩)

### தலைமகள்பிரிவாற்றாதுபுலம்பல்.

பொலியு மதியம் புலிபோலத் தென்ற
னலியு நமனு னலவே—னொலிதமி
ழோவா திசைக்குந் திருவொற்றி யொளவேலான்
மேவான் செயலறியேன் மேல. (௰௪)

### அருமைசெய்தயர்ப்பத்தலைவிகூறல்.

மேலான முத்தே திருவொற்றி மேவிய வேலவனே
கோலா கலஞ்செய்து கூடாம லேகல் குறைவுகண்டாய்
நூலா வுடைகட்டி யேலாத குன்றினு நோன்மைமிகுங்
கோலா வுயர்குணக் குன்றினுஞ் சென்ற குறிப்பறிந்தே. (௰௫)

### அருணிலையுரைத்தல்.

அறிவு மவாவு மொருவழிச் சென்றுங்
கொருதிற மின்றிப் பலதிறப் படுமே
குயகமழ் கறியு நெய்கமழ் துவையும்
பொன்னிறப் புழுக்கலுங் கன்னல்பெய் பாலுந்
தன்னிகர் குழம்பும் பண்ணிய வகையு
மிகவெழு சுவையின் முக்கனி வகையுங்
கோழரை வாழைக் குருத்தகம் விரித்துப்
பால்கெழு தன்மையிற் பலவே றமைத்து
முரவை போகிய முழுவெள் ளரிசி
கைவன் மடைய னடுதலி னெய்கனிந்து
விரலென நிமிர்ந்த வளையவன் மென்பத
முல்லை முகையென மெல்லிதிற் குழைஇப்

குள்ளுறை கருவாய்த் தெள்ளொளி விரிகுரு
சைவ சித்தாந்த முடிபொரு ளெடுத்திங்
கறங்கரை நாவிற் றிறம்பட விளக்கிப்
புறம்படு சமயப் பொய்ப்பொரு ளூறி
நலங்கிளர் தன்மையும் புலங்கொளாக் காட்சியு
மியைந்தொருங் கிணடிய வமையாப் பெருமைச்
சோம சுந்தரத் தோமறு தேசிக
னுடல்பொரு ளாவி யிடமெனக் கொண்டு
பொருளார் சைவந் தெருளுறக் கொளீஇ
யதற்கமை பொருளு நீயெனக் காட்டித்
திறப்பட வுணர்த்தினை மிகமே யதற்பின
ரெழும்புபூண் டொழுகு மழுங்கா வுள்ளத்துத்
தொண்டரு நரகரு மண்டரும் பிறரும்
வழிவழி யடிமை பெருகுற வெழுதிய
வோலை கொண்ட வொருமர பானு
முலகிற் சிறந்துதா னொன்றே யாகிய
மலகி லாறற றலைவரு மென்பது
வலலொற் றுக்கிய குறிப்பி னானு
மொற்றை யியக்கு முயிரே போல
நெற்றியங் கண்ண னிலவுத லானு
மிறைவ னைந்தொழி னிறையுயிர் மாட்டுப்
பொருந்தச் செய்யு மருந்திற லானு
மைந்தொழிற் பட்ட வாருயிர்த் தொகைகட்
கந்தழிப் பொருத்து மைந்தி னானு
மொற்றியூ ரெனும்பெயர் முற்றத் தோன்றும்
பெருநன் மாநகர் திருவிற் பொலிந்து
குவளை பூத்த பவளத் தாமரை
செவிரமும பணிலமும் புடைபட விடையிற்
றோன்றி யன்ன காண்டகு திருமுகங
கருநெறிக் கூந்தலும் பெருகிய கழுத்து
மேலுங் கீழுந் தொன்ற வாலிய
நறுமுத் தன்ன முறுவல் செறிதொறு
மின்னென மிளிரும் பொன்மா மேனி

பெறுவ தறியாச் சிறுமை யொன்றே
மருவரக் கிடந்த தெரிவில காலத்துப்
பொருவி லின்பந் தருவது குறித்துப்
புன்முத லாகிய மெய்யிற் புகுத்தி
யோரறி வுறுத்தினை சிலநாட் சிலநா
ணந்துமுத லாகிய வுடம்பிற் புகுத்துத்
தந்தனை யீருணர் வன்றே சிலநாட்
சிதன்முத லாகிய குரம்பையிற் செறீஇ
மூவுணர் வுணர்த்தினை மன்றே சிலநா
ணண்டுமுத லாகிய பொன்றுடற் கடவி
நான்கறி வோங்குறச் செய்தனை யீங்கு
மாவு மாக்களு மேவிய பின்றை
யையுணர் வெங்கு மெய்பெறக் கொளுவி
யொழுங்குற வுணர்த்தினை யொருசில பகலே
யாங்ஙன மொழிந்த வளவில காலத்து
நிறைவுறு குற்ற மறைமுறை தேயப்
பகுத்துணர் காட்சி மிகுத்துத் தோன்ற
மக்கள் யாக்கையிற் றக்கவா நிறுவிய
பலபிறப் புரீஇய நாள்களும் பலவே
யவ்வா றொழிந்தன போகச் செவ்விய
விந்நா ளெனக்கு நன்னெறி காட்டச்
செவ்வந்திப போந்த பொய்யா நாவிற்
செந்தமிழ் வரம்பு முந்துகண் டுணர்ந்து
மெய்ப்பொரு ளறிவுஞ் சொற்பொருள் வன்மையும
பொறையுஞ் செறிவு நிறையக் கொண்டு
தமிழ்மா ணாக்க ரமிழ்தென நுகர
விரித்துரை கிளக்குந் தெரிப்பரும் பெருமை
நாரா யணனெனுந் தோலாப் புலவோ
னேர்படு முளத்துச் சீர்பட வமர்ந்து
கருவிநூ லுணர்த்தினை பலவே யதற்பி
னொருவா யாணர் மருவுறு சென்னைத்
தவம்பெறத் தோன்றி நவையறு தமிழும்
வடநூற் பரப்பு நிலைகண் டுணர்ந்தாங்

வெறியயர் களத்தில் விளங்குவை யானே
முல்லையந் தொடலை முருகெழ வணிந்து
வெண்சாந்து பூசிய கேழகிளர் மார்பொடு
மிழிசின மகளி ரியைந்த வின்ப
வெறியாடு களத்து வெளிபபடு குவனே, எனவாங்கு
நின்னொடு மென்னிடைப் பட்டவிவ் வியைபா
லெனக்குநீ யருட ரியையுந் தனக்கு
நிகரா குநரொடு நகைதரு கேண்மை
செயலா குவதென மொழிகுவ ரதனு
னுந்தையு முனிகுவ னலல னன்னையு
நுந்தை வழிப்படூஉந் தகையண் மைந்துகெழு
பொருப்பைப் போழ்ந்து விருப்பொடு மெதிரந்த
வரிமா முகத்தனைப் பொரிபட நூறிக்
காழுறு மரககரை நூழி லாட்டிப்
பொரியரை மாவாய் விரிகடன் மூடிய
சூர்முதன் முதலற முருக்கிப் பேரரு
ளழிவுபடு முள்ளத்துப் பழியொடு பிறங்கு
முலையா வாழ்க்கைத் தேவர்கருத்
தலைமையொடு நல்குந தமிழ்கிழ வோயே. (௰)

### பிரிவாற்றாததலைவிமதியோடுவருந்தல்.

கிழமை நினையாத கேழ்மதியே பொற்றிக்
குழகன் பிரிந்த குறிப்பாற்—பொழுதறிந்து
செல்லுமுயிர்ப் பேதைக்குத் தீங்கிழைப்பாய் நின்னையுமெ
வல்லரவைக் கொல்லா மயில். (௰௧)

### தோழிபருவங்காட்டிவற்புறுத்தல்.

மயின்மீ திவர்ந்து திருவொறறி யூரசசென்ற மன்னவர்தா
மயின்மே லமர்த்தகண ணாய்பிரிந தாரலல ரன்புமிக்குப
பயினோடு சோத்திய கற்போற் றுணையைப் பயிர்ந்தகுரற்
குயின்மா வொடுங்கும் பொழுதும்வந் தன்றினிக் கூடுவரே(௰௨)

### அநுணிலைவியத்தல்.

கூடிய விருளின் வாடுவ தொன்றோ
பீடுயர் நின்புகழ் காடா தொன்றோ

# மும்மணிக்கோவை.

புழுக்கலும் பிறவு மளாஅய் விழுத்தக
நெய்யுடன் பெய்து மெய்மறந் துண்டாங்
காணு துறைவோ ரளவில ரன்றே
முகிழொடு குடுமியு முழைகெழு வாயு
மருவி யென்னு மறுவையு முடீஇ
யந்திக் காலத்து ஞாயிறொடு பொருவு
செவ்வா னென்னு மெய்கால் குருதியுங
கணைதொடு புண்ணின் முகுளித் தன்ன
பவளமுஞ் சிதர்ந்த திவளொளி கெழூஉ
மரக்க தன்ன பொருப்பின் காட்சியு
மடமான் பிணைகள் கன்றொடு குழீஇக்
கான்யாற் றெண்புன னிரைநிரை யருந்தக்
கானங் கோழி துணைகூப் பெயர்ந்து
ஞாயிறு தோன்றுங் காலை யறிவிப்ப
நிறங்கெழு தாராக் குறுங்கய மருங்கிற்
குறுகுறு நடந்து நீந்த வெறிபடு
தளவ மருமபி யெயிறென விளங்கக
கொன்றை பொன்வீ யுகுப்ப மனமல்
காதலங் கமழுங் காடுகெழு காட்சியுங்
கொழுவளை யீன்ற செழுநீர் முத்தஞ்
செந்தா மரையின் மிளிர்வன மங்கையர
திருமுகங் குறுவியா பொடித்தன் மானக்
குடம்புரை செருத்தற வடங்கண் மேதி
யில்லுறை குழக்கன் றுள்ளுதொ றொழுகுந்
தீம்பால் மாந்திய பருவரா லுகள
மலிபூம் பொய்கை மருதக் காட்சியுந்
தேற்றாப் புலவர் நூற்றிறங் கடுப்ப
வெழுவா யோங்கி முறைமுறை தேய்ந்து
கரைசார்ந் தவியுந் திரையே கரைதொடுத்து
மறுகரை காணு தகன்று நனியாழ்ந்து
நல்லிசைப் புலவர் செய்யுள் போலப்
பல்பொருள் செறித்த கடலே பொல்லா
வொழுக்கந் தலைவந்த பழிப்புடை யாளரும

விழுக்குண மேவுவ ரென்பது நலத்தக
முள்ளுடைக் குழையிடைக் கொள்ளை மணமவிழ்த்து
வாலிதின் விரிந்த கைதையங் கழியே
மின்சிதர்ந் தன்ன பொன்சிதர் பரப்பி
யெரிகிளர்ந் தன்ன விரிபூ ஞாழற்
பொழிலே யெனுமிவை யெழில்பெறத் தோன்று
நெய்தற் காட்சியுங் கண்டு மெய்யென
வழிவு மாழ்ந்து வாழ்வோரும் பலரே
காண்டகு சிறப்பிற் பாண்டின மேலா
லைவகை யமளியுங் கூறுபட வமைத்துக்
கால்களைந் தாய்ந்த வானமுகை முல்லை
கடிமணங் கமழ்த் தூஉய் மடிபடு
நுரைமுகந் தன்ன தூவெள் ளறுவை
செறிவுற விரித்து நறுங்குற டுரைத்த
கேழ்கிளர் தேய்வையிற் கோழகி னெய்யும்
புழுகு மான்மதமுஞ் செழுங்கருப் புரமுங்
கொழும்பனி நீரும் வழுவறக் கூட்டி
வேரியி னமைத்த சிவிறியிற் றூய்த்து
நிரைநிரை மங்கையர் முறைமுறை யிரட்ட
வுறங்கும் வாழ்க்கையிற் பிறங்குவோர் பலரே
தந்நலம் பகரும் பொன்விலை மாதர்
திவவியா ழெழீஇ நவைநான் ககற்றி
மிடற்றெழு மோசையு நரம்பெழு மொலியு
மொருநெறிச் சென்றுங் கொருநிலை திகழப்
புள்ளினந் துணைமறந் தொருங்கு வள்ளியர்
குழைமுகந் தோன்றி வறுமர முயிர்ப்ப
விழுமிதி னெழூஉ மிடற்றின் பாடலுங்
கொன்றையங் குழலுங் குன்றமர் வேயுந்
துருவி யூதும் பொருவி லோசையுஞ்
செவிவாய் மாந்திச் சிறந்தோரும் பலரே
பித்திகைக் கொழுநனை முத்தார் முல்லை
நறுவிரைத் தாமரை துவர்க்கால் வகுளஞ்
சண்பகங் குவளை பொன்மடற் றழை

லருளெனு மருவி விரிவுறப் பெருகி
முழவுத் தோளெனுங் கொழுவிய குன்றிற்
பன்முகம் பரந்து தணணெனச் செல்ல
நித்திலம் பெய்த விழுத்துவர்ச் செப்பின்
முய்திறந் தன்ன வாய்நகை தோன்ற
வரைவிலங்கி யோடு மினனே போல
வரமபொரு வைவே லுரநகிடந் தொளிரத்
திருமான் முகத்தி னிருவிழி யென்ன
மஞ்ஞையிற் கிடந்த விருதாண் மலர
வஞ்ஞைய ரிருவரு மிருமருங் கிருப்ப
வமைத்த கையு மருட்டு கையு
மிமைப்பி லிலலாத் தேவரும பிறருங்
கணடுகண் டுவப்பக் கவின்று நனிவிளங்குங்
காணடகு கோலந் தழீஇ மாண்டகு வென்
கண்ணெதி ரெபாலிந்தநின் னின்னரு ணினைப்பின்
வயாவுறு நோயும் பாரா தீன்ற
புதல்வோற் கண்டு களிகூருஞ்
சிதைவி றாயி னருளினும பெரிதே. (௰௬)

நெஞ்சறிவுறுத்தல்.

தேவா திருவொற்றிச் சேவா புதலவவென
நாவார வாழ்த்தி நடமபுரிவா—யாவா
வியந்து பிழைசெயயு நன்னெஞ்சே வேலோ
னியந்து னெதிரோதோன்று நாள். (௰௭)

தன்னுட்கையாறெய்திடுகிளவி.

நாளான் மலர்ந்து மனக்கினி யான்சென்ற நாளறிந்து
வாளார் மடலி னளியே மூயிரபோழ் வகையுமன்றிக்
கோளான சொல்லிப் புணாந்தார் கரியுங் குறிப்பறியாய்
கேளான மெய்யு முடங்குமொற் றிக்கழிக் கேதகையே. (௰௮)

அருணிலைபெறுதலரிதெனமொழிதல்.

கேதகை பழித்த மாதொரு கூறற்கு
நுதல்கிழித் திமைகருங கதங்கெழு விழியிற்
பொறியெனத் தோன்றி வெறிகமழ் சுனையி
லறுவ ரூட்டிய நறுமபான் மாந்தி

யறுவே றுருவின் விளையாட் டயர்ந்தாங்
கம்மையு மப்பனு மணையச் செம்மையி
னுலகு புரந்தருளு முமைதிரு மடியி
னறுவே றுருவு மொருவடி வாகி
விளையாட டமர்ந்த விளையோ யுழைப்பிரிந்து
நற்றவ ரோங்கு மொற்றி மாநகர்
வெற்றி வைவே லொருதிறம் பொலியப்
பளிக்கறைப் புகுந்த வொளிப்பரு மதியின்
முறைமுறை மிளிர்ந்து நிறைகவின் பொழியுந்
திருமுகச் செல்வி யிருபுறம் விளங்க
வுலகெலாம விழுங்கு மலகிலா வன்றிறற்
களிக்கரு மஞ்ஞையி னலப்பட வமர்ந்தென்
விழியெதிர் தோன்றிய வழியாப் பெரியோய்
தீயிடை நின்று நீரிடை மூழ்கியு
மரமே லிவர்ந்து தலைகீழ்த் தொங்கியு
மறுவகை யிருக்கையி னெறிபட விருந்தும
புறம்படுத் திழுத்தாங் ககம்பட நிறைத்துத்
தெளிநிலை முகிழ்க்கும் வளிநிலை யுழன்றுந்
தன்றொழி றபுத்துக தனிமுதற் பொருளி
னருளெனும வெள்ளம் வரம்பிற மிகுந்து
நிலையு மிடனென வுலகெலா நோக்கியு
மைம்பெரும் பூதமு மைம்புற நிறீஇ
யையவகைத் தேவு மாங்காங் கமைத்துப்
பொய்ம்முறை யின்றி மெய்ம்முறை பரவியுங்
கருவியும் புலனும் புரிவின்றி நிகழ
வொருமுதற் பொருளொடு மறிவினைக் கடவியு
மிருவகை நிலையு மொருமுறை யிறந்து
மேனிலை நின்று வான்பொரு ளுணர்ந்து
மூழி யூழியு மோவின்றி நோற்பப
போழ்மதிச சடையோன் போதா னுகக்
கொழுங்குறை தன்மெயிற பலமுறை தடிந்து
முறுப்பினை யீர்ந்து நெறிப்பட வீசியும்
பச்சிளங் குருதியை நசசி யுகுத்து

முயிர்ப்பலி வேள்வியிற் கடன்பல கழிப்பி
யரிதின் முயன்ற பின்றையும் புரிசடைப்
பெரியோன் போர்தில னாக வெரிகிளர்
வேள்வியாற்று மாழகுழியின்
வைந் நுனைய வெழுகிழீஇ
முழுவுடம்பும் பழுதுபடப
போழ்ந்து படுத்துப் பொன்றத் தம்பியர்
பாயவதற் கூக்கிய காலே வேய்புரை
பணைத்தோட் பாவையுந் தானுமாங் கெழுந்து
வானவர் தலைவன் சீரிதி னருளிய
வரம்பெறு பெருமையி னாமபெரி தெய்தினின்
சீறடித் தாமரை வேறின்றி வைகு
மழியாப் பேறறின் வழிவழிச சிறந்த
சூர்முதல் போலப் போன் பில்லே
னலவா யமர்ந்த வழனிறக் கடவுள்
செந்தமிழ் வழக்கு முந்துநின் றிசைப்பக்
கடாவிடை நிகழ்த்துந் தடாப்பெரும் பேறு
மிறைவன் கண்ட பொருள்வரம் பறிந்து
சொன்னெறி மாட்சியும் பொருணெறி மாட்சியு
மளவையின் விளைவுந் தெளிவுற விரித்துச
சுவைபெற வுரைத்த நவையில புலமையு
மறைப்பொருட் குறிப்பு நெறிப்பட வாய்ந்து
சிவனையே முதலெனச சிவணிய காட்சியுஞ்
சீரிதி னியைந்த கீரன் போலச
சொற்றொறுஞ் சுரக்கு மற்றமி லின்பமும
பட்டாங்கு கிளக்கு முட்டறு சிறப்புங்
கனனெஞ்சு நெகிழ்த்து மன்புறு மொழியு
மொருவழிச சிறப்ப வருமுறை கொளீஇ
யாற்றுப் படைசொலு மாற்றலு மில்லே
னங்கதன் கருவா யுள்ளுறை நுண்பொருள
விழுமிதி னெடுத்து வழுவற வமைததுத
தொண்ட ராரத் தண்டாது நொடுதது, நின்
றிருவடிக் கிடந்த பெருகிய வன்பினுங்

தமிழ்வரம் புணர்ந்த தமழூறு மறிவினு
முரைத்திற நிலையினும் வரைப்படா விறலினுந்
தானே தனக்கு நிகரென விளங்கிய
நச்சினாக் கினியனு மல்லே னிசசநும
வருக்கைச் சுளையும் பொருக்கரை மாவுங்
கொழுங்கனி வாழையுஞ் செழுஞ்சுவைக் கன்னலு
மொருங்குதலை மயங்கிய வரும்பெருங் கலவையி
னருஞ்சொல் வழக்கமுந் திருந்திய நடையும்
வண்ண வேறுமையுந் தண்ணெனு மொழுக்கமு
மொன்று நிரம்பிய குன்றுத் திருப்புகழ
வேறுவே றியம்பிய வீறுறு தவத்தி
னருண கிரியெனும் பெரியனு மலலே
நூலிடை வைத்த வாலிய பொருளினு
முரையிடை விரிந்த புரையமை தெளிவினுங்
கேட்போ ருணரப் பாற்பட வகுத்து
நின்புக ழனைத்து நன்பெரு மதியி
னுளங்கொள விளக்கும வளங்கெழு புலமை
நாரா யணனெனுங் குரவனு மலலேன்
களவிய றனககுப பலபட வியம்பிய
பளகறு நனபொரு டெளியா துழன்ற
புலவோர் களிப்ப நலமுறத் தோன்றி
மெய்ப்பொருள காட்டித் தமிழவழிப் படுத்தும
புல்லமண் மிகுந்த நல்லுணர் வழிந்து
பெரும்பெயர் வழுதியு மருந்தமிழக் கூடலு
முய்வழி காணு துழிதரு காலை
யொய்யெனப் போந்து மெய்ந்நெறி காட்டியுந
தண்ணருள் புரிந்த நின்னே போலச
செந்தமிழ வழக்கு முந்துற விரித்து
முடிநிலைச் சைவம் விடிஞா யிறெனப்
பைங்கதிர் விரித்துக் கங்குலிற் கூம்பிய
விரையவிழ தாமரை புரையுர வோருளம
புரிநெகிழந் தலரத் தருமியல் சிறப்ப
வுரையினுங கருத்தினும் வரையமை நோக்கினும

கொழுந்து மருவுஞ் செழுந்தண் வேரியுந்
தொடலை யாக்கியும் விடுபூச சிதறியுஞ்
செண்டும் பந்துங் கொண்டு விளையாடியு
நறும்பொருள் விரா அய் மெய்யிற் றிமிர்நதும
வறிதின் வாழு மககளும் பலரே
னைம்பொறி வழிசசென் றிம்பரி னுகரு
மைவகைச் சுவையு மொருகாற காட்டு
மைவிழி மடவார் பொய்படு மினபத்து
மெய்படத் துளங்கும விழலரும பலரே
தாமுந் துவ்வாது பிறர்க்கு மீயாது
வெருவரு பேயென வுரவோ ரிகழ
வாறு தரும்பொரு ளிவறிக் கூடி
மாறு வாழகை மக்களுங் களவருங
கவர்ந்து செல்ல நிமிர்நது வாளுககிர
செய்வ தறியாக கையரும பலரே
யிவ்வா றொழிநதனர் போகச செவ்விய
மெய்ப்பொரு ளுணர்துமென் றெப்புடன புகுந்து
கடவுட டன்மையு முயிரின் றன்மையும்
புடைபட வொற்றி வரமபளந் துணராது
மயங்கக் கொண்டு மக்களைத் தலைவரென
றொக்கக் கூறி யுழிதரு வோரு
மறிவா யருளாய்ச் செறியு மொருபொருள்
சிறுமையு மடமையு மெய்தி வெறுவிதி
னுயிரு முலகமு மாகு மெனபோருங
கட்புல னுருவ கருத்தின் றோற்றமா
யுட்புகுந் துணர்வோர்க்குப் பொய்ப்பொரு ளாகலிற்
கோயி லென்னே மேவி யாங்குறையுந
தூய பேரொளிப் பிழம்பென [illegible]லன்னே
வஞ்ச மாந்தர்பிறர் நெஞ்சம பிணிக்கக்
கல்லையு மண்ணையும் வல்லிதிற் பொருத்திச
சூழ்ச்சியி னமைத்த கீழ்த்திற மன்றோ
வென்றுரை கூறு வோரு மாகப்
பொன்றிய மாக்கண் மணலினும் பலரே

யாங்ஙன மொழிந்த வளவின் மாந்தருள்
யாரு மொருவ னாக நோனாது
வேறு பிரித்தெடுத்துக் கூறுபடு மதியின்
மறைபுகழ் சைவ நிறைவுற விரித்துத்
தெளிவா ரளவையின விளக்கி மலைவுதரு
மாறுபொரு டோட்டி வீறுறத் திகழுஞ்
சோம சுந்தர குரவனொடு கூட்டி
யின்ப மென்ப தைம்பொறி யானுந்
துன்பமொடு முரணித் துய்ப்பதோ வன்றே
முகிழ்நகை மாதர் குழுவொடு கெழீஇ
யிதழ்சுவைத் திருக்குந் திறத்ததோ வன்றே
யொன்றினும் பற்றாது தன்றிறத் தெழூஉங்
குன்றலில பொருளோ வன்றே தொண்டரெனும்
வண்டினங் குழீஇக் கொண்டு கொள்ளுநின்
றிருவடித் தாமரை யதுவென மொழிவித்
தென்னையு முய்யக் கொண்டு பின்னு
மறைநவி லந்தணர் வைகறை யுணர்ந்து
வாவி குடைந்தாசகுந் திவ்விய வோதையுந்
தாமரைப் பள்ளித் துயிலுணர் புள்ளினம்
பார்ப்பொடு கெழீஇச் சிலம்பு மோசையுஞ்
சிறுநுதற் கருங்கட் குறுந்தொடி மகளிர்
குங்குமச் சாந்துங் கொங்குலாங் கூந்தலும்
பாலகெழு தன்மையிற் பலவே தழீஇ
நீனிற முகிலின் மறையு மின்போ
னீரூழ் காடும பேர்வி லார்ப்பொலியுந்
திருவின் செலவி யருமையிற் பெறற
குறுநடைச் சிறுவர் சிறுதே ருருட்டித்
திறல்கெழு மற[illegible] மற்பயில் கழகத்துக்
கைபுடைத் தார்க்கு மிசையினுஞ் சிறந்து
விட்டுவிட் டிசைக்கு மட்டில கம்பலையு
மோவாது கறங்கு மொற்றி மாநகா
தாவா விளமை தலைத்தலை சிறப்பப்
பன்னிரு விழியெனுங் கண்ணகன் சுனையி

பொருந்தக் காட்டி வருந்திறன் மிகுத்து
பலைவுபடு முள்ளத் தறிவொடு கூடாச்
சிறுபுன் மாந்தர் குறுமொழி களைந்து
நினபுகழ் விரிக்கு மன்பிற் சிறந்த
சோம சுந்தர குரவனு மலமேன்
பொருள்பெரி தீட்டப பெருகுறு மவாவினு
மீட்டிய வொணபொரு ளிவறிக கூடி
மககளு மனைவியுந் துய்கக நலகி
நின்கழல வணங்கா வினை மடியினு
மரிய நாட்களை வறிதே போக்கி
யறந்திறம புளியிற் சிறந்தனென் மனனே
யினைய தீயெனின னினைவருந திருவடி
விழிநீ ருறைபப முழுமெயும பனிபப
நிரைநிரை வாரா துரைநனி குழறப்
பொறிவழி யறிவுஞ் செறியு முட்கருவியும
பலவழிக கவரா தொருவழி நிகழ
வன்புரு வாகுநின் றொண்டர் போல
நீங்கா வன்பி னிலைநின்
றியாங்ஙனம பெறுவெனோ யாங்குபட மொழிபோ(மே)௬

தோழிக்கிள்ளையைத்தூதுவேண்டல்.

மொழியுங் குழற முழுவுடம்பும் பைத்து
விழியுந் துயில்கூடா வெய்யோள்—பழிபைத்
திருவொற்றிச் சேயோற் குரையாய் கிளியே
புருவுன்னை யொப்ப துணார்ந்து. (௨

அருணிலையுரைத்தல்.

உணர்ந்தா ரறிவினுந் தோன்று தொளிக்கு மொருமுருக
ணிணர்ந்தார் சுரிகுழன் மங்கைய ரோடென் னிருவிழியிற்
புணர்ந்தா ரெயிலொற்றி மேவிய வாறு புனிறுசெல்லா
வணந்தாழ குழவியைத் தாய்சென்று புல்லிய வண்மையன்றே

எழினலங்கூறிநெஞ்சறிவுறுத்தல்.

வண்புன னிலையிற முண்ணறல் போலவுந
தாமரை மொய்த்த வண்டினம போலவும

பளிங்கிற் றோய்ந்த நீனிறம் போலவுந்
திருமுக மருங்கின் வருமுறை றுணர்ந்தாங்
கிடையிடை சுரிந்து நீண்டு கடைசுழன்று
கண்ணொளி கதுவுங் குஞ்சியை யன்னை
யிருபாற் கூறிட் டொருபாற் சூழியு, மற்
றொருபாற் பனிச்சையுந் திருவதி னமைப்ப
நறுங்கதுப் பொளிரும பெருஞ்சிறப் பானுஞ்
செம்மணிப் பலகையி னம்மணி குயிற்றி
வரம்புற விடுத்த வண்ணம போலப்
புருவக்கொடி படர்ந்த விரிநுத லானு
மந்நுதல் கிளர்ந்த பொன்போற் செவ்விழி
யுத்தி யெனனுந் துதகிப் பையர
முடிமேன் மணியெனக் குடிகொள லானும்
வெணபனித் திரளைக் கண்ணுறப் போழ்ந்து
துவர்நிற மூட்டிச் சிவணுற வமைத்தாங்
கிருபுறங் கதுபபு மருவுத லானுங
குழையொடு கெழுமுந் தழைசெவி யிரண்டு
மோவெனும் வடிவொடு மேவுத லானு
நடுவிற் குழிந்து வட்டித் தமைந்த
படுபொற் கிண்ண முகழ்கவிழ்த் தன்ன
மோவாய் நிவந்த முறைமை யானுங
கிளையரி நாணற் கிழங்கு மணற்கீன்ற
முளையு முருந்தும விளைநீ முத்தமுங்
கூர்ந்து நிரைந்து வல்லென வொளிவிரிந்
தெழுந்தொளி ரெயிற்றொடு பொருந்துத லானுங்
கொவ்வைக் கனியுங் கொழுவிய பவழமுஞ்
செவ்விய வல்லென விலவிதழ் புரையுஞ்
செந்நீ ரிதழொடு மன்னுத லானு
முத்தக் கோவை முறைமுறை வைத்த
நத்துவர்ச் செப்பு நன்கனந் திறந்தென
வரக்குரு வூட்டிய வாம்ப னறுமுகை
தளைநெகிழ்ந் தலர்ந்த தன்மைத் தென்ன

முள்ளெயி றிலங்க நகுதொறு நகுதொறுஞ்
செவ்வாய் தோன்று மவ்வாற் றானு
மெழுமிடங் குழிந்து விழுமிதி னெழுகித்
தளவரும் பென்ன வளங்கனிந் திலங்கி
முன்னெழு மூக்கின் றன்மை யானு
மோரருட் கடலிங் கீருரு வாகிக்
கரைபுணர்ந்து கிடந்த முறைமை போலப்
புருவக்கொடி கடவாப் பெருவிழி யானும்
விரையவிழ் தாமரை நறையுகுத் தென்னக
கேட்டொறு மினிக்கும் பாட்டொடு தழீஇச்
செழுவாய் மலர்ந்த மொழியி னானும்
வலம்புரி யன்ன வானறுங கழுத்தொடு
மேற்றினத் தெருத்தின் முரிப்பெடுத் தன்ன
குவவிப புடைதத பிடரி னானு
முழவெனச சரிந்துவல் லுலமெனத் திரண்டு
வரையென நிமிர்ந்துபின் னெழுவெனத் திணிந்து
மலையொடு பொருத மால்களி றென்று
புலவோர் கூறும் பொருண்மொழி காட்ட
யானை யென்னும் பானகு திருமொழி
கொங்கை மருப்பி னுங்கக் குத்தி
யொருபாற் பெரும்போர் விளைப்ப வொருபால
வள்ளி யென்னுங் கள்ளவிழ் குழலா
டடமுலை வேதிற் படுபு ணுற்ற
வுளங்கொண் டெழீஇ யுறுமிடன் படாஅ
தொருபுற மொற்ற வருமுறை நோக்கிக
கொழுநனை பிணைத்த மாரகமுங் தொடலை
முறுவலித் தென்ன முறுக்குடைந் தசைய
வாள்வலி நிலையுந் தோளி னானுங்
கைவல் வேகடி யைதுறக் கடைந்து
வழுவழுப் பாக்கிய கொழுந்துகிர்ப் பலகை
புணர்ந்தொருங் கிரண்டு கிடந்தது போலக்
கண்ணகன் றோங்கிய கவின்கெழு மார்பத்
தியானைமருப் புழுத சுவடு போலவும்

வரையொடு படர்ந்த வல்லி போலவும்
வரிமூன் றொழுகிய திருவி னானு
மழையு மரனுங் குழைந்தொருங் கோட
விழுமிய பொருள்பல வேண்டிநர்க் குதவுந்
தாடொடு தடகைகயிற் றூயுவங் தீத்த
வாலிதின் விளங்கும் வேலி னானும்
பானுரை முகந்த பரிசொடு பொருஉந்
தூவெள் ளறுவை யசைஇ மூவகை
மடியுடன் விளங்கி வடிவுடன் சரிந்து
நடத்தொறுங் குலுங்கும் வயிற்றி னானு
மெழுமிடந் தசைந்துபின் னொழுகுதொறு மெலிந்து
மழைக்கடக் களிற்றின் புழைக்கை யொத்துங்
கொழுங்கனி வாழையின் கோழரை யேய்ப்ப
ஊறு மொளியும் வீறுறத் திகழு
நிறங்கெழு மரபிற் குறங்கி னானு
மெப்பாற் பொருளுந் துப்புற வைகு
நிலைக்கள மென்பது பெயரிற் காட்டி
முளையிள ஞாயிற்றிற் றளைநெகிழ்ந்து விரிந்த
யெரியகை தாமரை போல விரிபுகழ்த்
தொண்டர்க ளெதிரிற் கண்டிட மலர்ந்து
நிகரி லின்ப நறைமுறை யொழுக்கிப்
பெருமையொடு வைகுந் திருவடி யானும்
பெருமண லெக்கர்ச சிறுகுடி வாழ்க்கைக்
குறுமொழி மாக்க ளுறுமீன் படுத்து
மாழ்திரை மூழ்கி வீழ்மணி யெடுத்துங்
கருங்கட லூர்ந்த வெள்வளை வாரியு
நிரைநிரை கரையிற் குவையினர் செல்ல
மறிகய லுகளுந் திருமுக நுளைச்சியர்
கொடிச்சி தந்த கடுப்புடை நறவுங்
குடத்தி கொணர்ந்த பலப்படு முதிரையு
முழத்தி யெடுத்த விழுத்தகு பழனும்
பெறுவிலை யாகச சிறுமீ னெடுத்து
மிடையிடை முத்தம் புடைபுடை வளக்குங்

கோடு கொண்டு பீடுற மாறிப்
பொருசார் பேரொலி நிகழ்த்த வொருசார்
பனிமலை நிவந்த பண்பு போலச்
சேண்டொட வோங்கிய வுபபுக் குன்றந்
தலையழித் துமணர் பொதியுறச் சோத்திய
வொழுகை யுருளை முழுமணற் புதைதலிற்
பிடாகொடுத் தெழுபயிக் கடுமபக டிரப்புந
தாளாண் மாக்க டலைப்படு முழுறும்
புலவுக்கழி முளைத்த துவரிதழ்த் தாமரை
புன்னை நுண்டாது பொறிப்பத் துன்னிய
வுருவொடு விளங்குந் தோற்ற மெரியிடை
வுருகிய பசும்பொன் கவிழப்ப வோடிய
திருவொடும பொலியுஞ் செவ்வியு மருவிய
நெய்தலங் கானலை துறக கிடந்த
வொற்றிமா நகரிற் கற்றைத் தோகை
மயின்மே லிருந்து பயிலுத லானும்
காண்டொறு மினிக்குங் காட்சியு முடையா
னுரைப்பத் தீராச் சிறப்பு முடையன்
றம்முயிர்க் கினிய செமமொழிப் புதல்வரை
நோக்க நோக்க மீக்கிளா காத
றந்தையர்க் கெழுதல் போலக் கண்டிடும
விழியள வமையாக் கழிபெருங் காத
லெய்தினர்க் குறுக்குஞ் செய்தியு முடைய
னுருகெழு தோற்ற மருவுவ னென்று
வெருவர லொழிதியா லின்றே முருகன்
குழவிக் கோலத்தும் விழுமிதி னமர்வன்
மடவரன் மகளிர் தடமுலை குழைக்கு
மிளமைக் கோலத்தும் வளமையொடு பொலிவனதனுன்
மின்னெனத் தோன்றிக் கொன்னுற மறைந்தும
வாதுவ னடவாக் கலிமா போலத்
தீதுறு நெறியிற் றிறம்படச் சென்றும
பாகடு களிற்றின் பண்பு போல
வுறுதி கொள்ளாச் சிறுமையின் மிகுந்து

மொருவழி நிலையா தோடிப்
பலவழிக் கவர்க்குமென் னிலைமையின் மனனே. (௨௰௨)

### அநுடரவேண்டல்.

மன்னு மொருயானை யூட மறுயானை
தன்னுதவி வள்ளி தடமுலைக—டுன்னுவிப்ப
வொற்றி நகர்வைகும் வேலோ யொருபெரிதோ
பற்றி யெனையாள் பரிசு. (௨௰௩)

### தோழிதலைவிகுறிப்பறிதல்.

பரிசு பிறிதொன் றறியேன் பருமுத்தப் பைம்பணைசூழ்
விரிபுக ழொற்றி வருவேலர் போலும் விடைக்களிறுன்
றரிதிற் பெயர்ந்திங்கு வந்ததுண் டோவென்ப ரங்குசெல்வர்
தெரிவிற் பெரியர் செயலோ சிறியரெனு சேயிழையே. (௨௰௪)

### கழற்றெதிர்மறை.

இழைநெகிழ பருவர லெய்திய மகளிரின்
மழைத்தடந் தோள்க ளிளைத்துத் தோன்றப்
பாற்கடல் போலத் தூத்தகப் பரந்த
நூற்படு கேள்வியுஞ் சீர்ப்படா தொழியச
சிறுநெறிச செல்லு மறியா மாந்தரு
நல்வழிச செல்லத் தெள்ளிதிற் காட்டு
மிழுக்கா நடையும் வழுக்கிப் போக
விங்கிலை நீயுந் திரியிற் பின்றொரு
பௌவநீர் வெதும்பின் வளாவுநீ ருண்டோ
குன்றுநிலை தவறிப் பந்துபோ லுருளிற்
சென்றுவழி யடைக்குங் குன்றியு முண்டோ
கடுங்களிற் றெருத்த றெடுமெடுத் துண்ணின்
முருங்கா தோம்பும் பெருங்கல முண்டோ
வென்றுபல கூறி நின்றெனை நெருங்கி
நன்மை நாடிய வென்னுயிர் நண்பா
மறியிளங் கன்று முறியுணுந் தாயொடு
குழைப்புத றேறுங் குழீஇ யுகள
வரையாடு வருடை யிடைவாய் தாண்டி
யுள்ளஞ் செருக்கித் துள்ளித் திரிதர

நிலந்தொட்டு வீழ்ந்த குலுங்குமயிர்க் கவரி
மென்மெல வசைஇ மேதகச செல்ல
முளவுமா தொலைச்சிய வன்கட் கானவர்
ஞெலிகோற் பொத்திய நெருப்பிற் காய்ச்ச
வோரி பரந்த தேனிறா லெடுமார்
கழைக்கண் குறைத்து நலத்தக வியற்றிய
மால்புவைத் திடந்தொறுங் குறவ ரேறத்
தினைக்குறு மகளிர் சுவைப்பட மிழற்றுங்
கிள்ளை யுறக்கும் வள்ளை யொலிப்ப
மருப்பிடைச் சுற்றிய பொருப்புயர் வேழத்துப்
புழைக்கை யேய்ப்ப விழுத்தக முதிர்ந்த
தாளொடு வளைந்த குரற்றினைப் புனத்துப்
படுகிளி யோப்பும் விடுகவண் சுழற்றிக்
கோல்வளைக் கொடிச்சி மேவித ணமர
விருங்கல் வியலறை வரிப்பத் தாஅய
நலமுறு வேங்கை பொலம்வீ யுகுப்பத்
தேக்கிலை புய்த்த புன்றலைச் சிறாஅர்
மீக்கிளர் கோட்டிற் பரிதியிற் றொடுத்த
தேத்தடை பிறைக்கோ டுழுதெனக் கீண்டு
மாயோன் மார்பிற் செஞ்சேறு கடுப்பப்
பாஅ யிழியும் படுநறவு முகந்து
பசுந்தினைப் பிண்டியொ டசும்புற வளாஅய்
நிரைநிரை வைத்து விரைவொடு மாரக்
கண்களி கொள்ளும் பன்மலை யடுக்கத்து
மரவமுங் குரவமும் பொரிகெழு புன்கு
மெரிகிளர் செயலையும் விரியிணர் மாவும்
பராரைச் சாந்தும் பாவை ஞாழலும்
விரிதலை வாழையும் வியன்சினைப் பலவுங்
கொன்றையும் புன்னையுந் துன்றிய நறவமுங்
குழைமுகந் தோற்றிக் கொழுநனை யரும்பிப்
புரியவிழ் மலரிற் சிறுவடுக் கிளர்ந்து
தீவளி யாகித் தீங்கனி தூங்கித்
தண்ணிழல் பயந்து கண்கவர் வனப்பின்

முகில்கண் ணுறங்கத் தலைமையொடு பொலிமே யொரு
சுளைநிரை யமைந்த கொழுமபழந் தூக்கிக் [பாற
குறுமல ரவிழ்ந்த நறுவிரை தெளித்து
வீசுகா லசையும பாசிலை நரந்தமு
நலனுறு மகளி ரிலவிதழ் கதுவிய
முறுவ லன்ன சிறுவிதை பெய்த
பொலன்குட மெடுத்த வுலவை மாதுளையுங்
கருமணி புரையு மொருகனி நாவலு
முவர்க்கழி மணக்குந் துவர்க்கால் வகுளமும்
பொற்றிரள் கடுப்பத் தெற்றென விளங்கு
மெழிற்கனி பழுத்த வெலுமிச்சம புதலுங்
காவதங் கமழ மேவுவ வன்றே யொருபாற்
குலிக மூட்டிய தலைமையிற் றிகழ்ந்து
நவ்வி நோக்கியர் செவ்வாய் போலக
கொழுங்கனி யுடைய கொவ்வைக் கொடியுங்
கற்புடை மகளிர் முற்படச் சூடும்
வரிசையின் மிகுந்த பரிசுடை முல்லையுந்
தின்பது கல்லாப் புன்றலை மந்தி
கறித்துத் துள்ளுங் கறிவளர் கொடியு
மணிற்புறங் கடுக்கும் வரியுடைக் கொடுங்காய்
கொள்ளையிற் காய்த்த வெள்ளரிக் கொடியுஞ்
சொல்லுயர் மரபின் மெல்லிலைக் கொடியுஞ்
சிறுபளிக் குருண்டை செறிவுறுத் தனைய
தீங்கனிக் குலைக டூங்க வயின்வயி
னந்தாது வளரு முந்திரிக் கொடியு
மிடையிடை தாஅய் மிடையுமா லொருபா
னடுவிற், பாயொளி மதியம் பரிதி வெம்மையி
னிளகிப் புனலா யிழிந்தது கடுப்பத்
தெளிநீர் வாவியொன் றுளதான் மற்றது
சிறுகா ரேறு முறுநீ ரொழுக்கி
வாலுகம் பரந்த கோலிய பாத்தியிற்
பச்சிளம் புல்லை நிச்சலும் வளர்க்கு மதாஅன்
றன்னச் சேவ லணிமயிர்ப் பெடையொடும்

பொன்னந் தாமரைப் பொலிந்து வீற்றிருப்பவு
நித்திலம் பயந்த நத்து வானமடுவின்
மீனினம் வளைஇய நாண்மதி போலப்
பால்கெழு மரபிற் பரந்து செல்லவுங்
கொழுங்கயன் மாதா விழியென மிளிரவுங்
கருவெரி நுடைய பருவரா லுகளவு
முற்று மஞ்சட சிறுபுறங் கடுக்கு
மிறவு கரைமருங்கிற சுரிந்து துள்ளவுஞ்
சிறுவளி யெடுப்பச் சிறுதிரை யெறிஇ
முறைமுறை புராஅய்க் கரையினைச சாரவுஞ்
செழுநீர்க் குவளையுங் கழுநீர்ப் போது
முழுநெறி யாமபலுங் கழியவுங் குழுமிக
காண்போர்ப் பிணிக்கு மாணபின தன்றே யாங்குப
பொதியச சாந்தந் தழைய வசைஇ
யரும்பற விரிந்த நறும்பூ வளைஇ
விரையுந் தாது நிறைய முகந்து
தலைத்தலை வீசி நலத்தக வுலாஅந்
தென்றலு மென்று மோவா ததாஅனறு
குன்றிக் கண்ண குயில்க ளொங்குங்
துன்றிய மகிழுவி னன்றுகூ வுமமே
யாடுவாற் சிரலக ளூடொறுங் கூடி
யோடுமீ னருந்தி வீடுறு தனறே
துகிர்கோத தன்ன வுகிருடைச சிறுகாற்
புறமரப் பொதும்பி னிறைகூ ருமமே
தூங்கணங் குரீஇப் பாகுபடத் தெற்றிய
வருந்தொழிற் குடம்பையிற பொருந்து மன்றே
பைஞசிறைக கிள்ளை யொருகா றாக்கிப்
புன்சிறு கிளையிற் கண்டுயில் கொளுமமே
யறுவலை மடித்தன்ன பறைகெழு நாரை
சிறுகா றேறும வருமீ னோக்கித்
தொகுதி யாக மிகுதியொடு வதிமே
வண்டுந் தேனும் வரிக்கடைப் பிரசமு
மிம்மென முரன்று நன்மலர் தோறு

மணிநற மாந்திக் களிகூ ரும்மே
பூவாக் கண்ண தோகை விரித்து
முளையிள ஞாயிற் றிளவெயி லெறிப்பப்
பீடுறு மஞ்ஞை யாடுறு மன்றே
யின்னுங் கூறல் வேண்டிற் பின்னுமென்
சொல்லள வமையா மல்லலம் பொதும்பர்ப்
பல்பெருஞ் சிறப்புங் கண்டிலை மன்னோ, வன்றியாங்
கனிச்சமேற் படினுந் தனித்துய ருழக்குந்
தழைமலர்ச் சீறடி குழைபட நடந்து
பொழிலிடம் புகுந்து பூந்தட மருங்கின்
விழைதக நின்ற பழுதில் பாவையை
யென்னுள மென்னுந் தன்னமர் கிழியில்
வழுவின் றெழுதிய வெழிலோ வியத்தை
யமிழ்துபொதி துவர்வாய்க் கிளவிசில மிழற்று
மாநிறங் கொண்ட தூநிறக் கிளியைக்
காடுறை வாழ்க்கைத் தன்னினம் பிரிந்து
நாடுறை வாழ்க்கை நன்கன மருவிய
குடமாண் கொங்கை மடமான் பிணையை
கிளிச்சிறை யென்னும் பழிப்பறு பசும்பொன்
கரைத்தீண் டெழுதிய தரைக்கிளர் வல்லியைக்
காமக் கடும்பசி நாமுறக் களையும்
பெறுதற் கரிய வுறுதுணை மருந்தைக்
காண்டல் செல்லா வருவப் பொருளெனப்
பூண்டோர் புகழுரை புரைபட் டொழிய
மின்னென் மிளிர்ந்தென் கண்ணெதிர் பொலிந்த
கரும்பினு மினிக்குமென் னரும்பெற லுயிரை
யென்னுள மன்னிய துன்னிரு ணீங்க
முற்படக் கொளுவிய பொற்சுடர்க் கொழுந்தைப்
புலங்கொளக் காணும் பொறியு மின்றா
லாவண வொலியு மருங்கட லொலியு
மொன்றுதலை மயங்கி யென்று மோவா
வொற்றிமா நகரிற் றற்றகப் பொலிந்த
பசியதோர் மஞ்ஞை மிசையமர் செவ்வே

டேவரு மயங்கு மூவா மாயம
பலமுறை யியற்றிய தலைமைதீர் சூரின்
பேருரம் வசிந்த கூர்வடி வேல
ஞேறு வுள்ளத்து நான்முகன் றெளியத்
தலையிற் குட்டிய நலனுறு குமரன்
விண்ணவர்க் கரிய னெம்மனோர்க் கெளியன்
பிறைமுடி புதல்வன் மறைமுடி முதல்வ
னுமைதரு சிறுவ னெமையளி யுறுவன
பன்னிரு கைய னென்னுயிர்க் கையன்
றிருவடி நினையா வறிவிலர் போல
வென்னெதிர் தோன்றிப பன்முறை கழறினை
யிங்கிது விடுத்துமற் றுநகுச சென்று
துடியிடை யொருகை யூன்றி வடிவிழி
திசைமுகம் பரபபி நசைபடப் பார்க்கு
மிருநகண் மானபிணை காணி
னெருங்கி நின்றிங் குரையலை யினியே. (௨௰௫)

பிரிவாற்றுத்தலைவிதோழியோடு கூறல்.

இனியா ரெனக்கிங் கினியா ரியைந்தார்
முனியார் முனிந்து மொழியார்—பனிமொழியாய
புள்ளொன் றிவர்ந்து புகழெோற்றித் தந்நகர்க்கு
நள்ளிருட்கட் சென்றார் நமர். (௨௰௬)

நெஞ்சறிவுறுத்தல்.

நமரா யிருந்துபின் னேதில ராவர் நயமிலருந
தமராவ ரென்னிற் றமர்பிற ரொன்று தகவுசொல்வி
யமராடி நிறற்ல வறிதுகண் டாயலை யாழியொற்றிக் [சே.
குமராவென்றேதிசகுடந்தங்கொண்டேத்தக் குறிக்கொணெஞ்

புலவராற்றுப்படை.

நெஞ்சுநெக குடைநது பஞ்சுகண் ணடையா
வுமெயுரித் தன்ன கடுமபசி மருங்குற்
பழுப்புடை தோன்றிச் செழிப்பின்றி வைக
வறுமை யுழந்த வுறுமனைக் கிழத்தியொடு
நாளு நாளும் வாளாது கலாய்த்து

கோளுப் பசியி னுறு தழூஉம்
புன்றலைக் குழவி தன்றிற நோக்கிக்
கனவுகாண் பொழுது நனவெனத் தோன்று
மருந்துய ரொன்றும் பெருந்துய ருறுப்ப
மிடிகெழு வாழ்க்கையிற் குடியா யிருந்து
மழுங்கிய வுள்ளத் தொடுங்கிய புலவோ
ரியற்றமிழ் வரம்பு திறப்பட வாய்ந்து
புலங்கொள நிரம்பிய நலங்கிள ரறிவோய்
வழுவொன் றில்லா விழுமிய வொழுக்க
முயிரினு மோம்புஞ் செயிரறு பெரியோய்
கொழுந்தமிழ் போலக் குளிர்மாண் குணத்தோ
யுழுந்துரு ளளவையிற் செழுந்தமிழ்ப் பாக்க
ளூறுநா றியற்றுங் கூறுபடு மதியோ
யொளிச்செல வதனினும் வளிச்செல வதனினு
நெறிப்படக் கிளக்கு மிறைக்கவி வல்லோ
யளவைநூன் மரபிற் பிறழா தியாண்டுங்
கொள்வுரை நிகழ்த்தும் வளமுறு முணர்வோய்
பொருளிய லறிந்து மருளறப் புனைந்து
கேட்போர்ப் பிணிக்குங் காட்சிசா லுரவோய்
பண்டைப் பிறவியிற் றண்டா தாற்றும்
பெருந்தவ முடைமையை மன்னே பொருந்தியின்
னீங்கெனைத் தலைப்பட் டனையே யோங்கி
யூழி செல்லினு நீடு வாழ்மதி
கீழ்த்திசை யெழீஇ மேற்றிசைப் படருந்
தீத்தெறு ஞாயிறு வடதிசைப் புணர்ந்து
தென்றிசை நோக்கித் திசைதடு மாறினும்
வானக் கடலின் மீனென வயங்கு
முடுநிரை யுதிர்ந்து கொடுமை யாயினு
முலவா வாழ்க்கையி னிலைமதி சிறந்தே
வறுமை களைந்து சிறுமை நீங்கி
நன்னிலை பலவு மின்னே பெறுதி
வரம்பறு மின்ப நிரம்பக் கோடி
நின்னுயிர்க் குறுதி நாடித் துன்னிநின்று

## மும்மணிக்கோவை.

நிரைநிரை கூறுமென் னுரைபிழை யலையே
யின்னுங் கேட்டல் வேண்டின் முன்னுமென்
சொல்லள வமைந்து நலம்பல வெய்தினர்
பல்லோர் பல்லோர் பண்டு முண்டா
வினியொன்று கூறுவென் கேண்மதி பனிகெழு
முல்லையங் கொடிக்கு மலலலஞ் செழுந்தே
ரருளவர வீத்த பெரியனோ விலனே
விழியாக் கண்ணை செழுமயிர்த் தோகைக்கு
நறுமபடாம வீசிய வுறுவனு மிலனே
பவனமா வுலகி னவையறப பெறற
வமிழ்துபொதி நெலலி யெளவைக் கீத்த
சிதையாப பேற்றி னதிகனு மிலனே
குறுநடைப் புறவின் றபுதிநணை டொருசிக
குருதிகெழு மைந்தடி முறைமுறை யடிந்து
கன்னம்புக் கேறிய மன்னனு மிலனே
யருந்தமிழப புலவோர் பெருநதிற பூணாந்து
பொன்னு மணியுந் தன்னனை நிலனும்
வரையாது வழங்கிய வரசரு மிலரே
மெயமொாடு மிடையாப பொயமொாரு ளிடடிக
தாமறி யளவையிற பிறர்க்கொள் றியாது
தாமே நுகருந ரியரோ வுளரே
தமிழ்வழக் கறியா தமைவில கூறுந
கறறறி வில்லா மறறினிப் பலரே, யதனன்
மற்றவா கடைதொறு நித்தலும படர்ந்து
வாய்வா ளாது வலலாங்குப பாடிக்
கொன்னே திரித லின்றது மன்னோ
கொழுநனை யருமபிய காஞ்சியங் கோட்டிற்
புன்றலைச சிறுவ ரேறித துன்றுகடற்
சுரிதிரைப் பாய்ந்து விளையாட் டயரவும்
வெண்டோடு விரிந்த கைதையந் தாது
மெய்படத திமிர்ந்த நெயதசிறை வண்டினம்
விலையறு முத்தமொடு தலைமயக குற்றுக
கண்மயக் கேறி யெண்ணில கிடப்ப

நுளைச சிறு மகளிர் வளைக்கையின் வாரிக்
குடம்புரை பணில நிரம்பப் பெய்து
யாமை யடுப்பி லாம்ப னெருப்பிற்
றுமறி திறத்தா லடுவுழி மயக்கற்றுத்
துண்ணெனப பறந்து விண்ணிடைச செல்ல
வியப்பிடை யெழுந்த மயககொடு நிற்கவும்
வேறுசில சிறுமியர் சாறுகெழு கரும்பின்
மீன்சினை யன்ன வெண்மணல் குவைஇத
தேம்பொதி மழலையொடு சிறுபாட் டிசைத்து
வயின்வயி னின்று மகிழ்வொடு குறுவவு
மழகுசா னெய்த னலமுற மருவிய
வொற்றிமா நகரிற் பொற்றொழிற பொலிந்து
விண்டொட நிவந்த விஞ்சி வளைஇய
வுருகெழு திருநகா காண்டொறும் பரசி
மலைகுயின் றன்ன நிலையுயா தலைக்கடை
யஞ்சுவரு நோக்கமொடு நின்றனெ னாகச்
சுருளிருங் குஞ்சி பொன்ஞாண் பிணித்து
நிலன்றொட வீழ்ந்த பொலந்துகி லசைஇச்
சாந்துபுலா மார்பிற பூந்தொடை புரள
வேறுசெல் செலவின் வீறுபடப் போந்து
யாரையோ புலவோ யாறுமுகத தையன்
புகுதது நின்னையென் றருளினன் போதியென்
றின்னுரை யொருவன் பகர வதனெதிர்
சொல்லுவ தறியேன் மெல்லெனப் புக்குப்
பொன்புனை விளக்கந் தங்கையி னோங்கி
மின்புனை மகளிர் நிரலபட நிற்பக்
கைவல் பாடினி கறையறப் பெற்ற
பயனுடை யெழா னயனுற மரீஇ
விரனுதி தெறித்த நரப்பிசை நோக்கி
மிடற்றொலி பொருத்தி நெறிப்பட மிழற்ற
வுருமதிர்ந் தன்ன மண்கனை முழவமும்
வரைவேய் துருவிய வுரைகெழு குழலும்
பேணுறு மரபிற் பாணியும வலலோர்

# மும்மணிக்கோவை.

பால்கெழு மரபிற் சிறிதி னியக்கச்
செந்நெருப் பார்ந்த பொன்னுலைத் தடவி
லகினெய் பெய்து பலர்நின்று புகைப்ப
வடமலைப் பிறந்த வான்கேழ் வட்டத்துத்
தென்மலைப் பிறந்த நறுங்குற டுரைத்து
விழுமிய திரட்டிய செழுநறுங் குழம்பி
லைவகை விரையும் விராஅ யொய்யெனத்
துருத்திப் பெய்து செறிப்பப் பலர்நின்று
தலைப்பெயன் மாரியின் மலைசசாந் துறைப்ப
வாழையுங் கமுகும் வயின்வயி னாட்டி
யோவிய நுட்பமு மொண்பணி நுட்பமு
மேவிய படாஅ மேலுறக் கட்டிக்
கழைகுபுரை நித்தில மிலங்கத் தூக்கிக்
கேழ்கிளர் பன்மணி காழ்பட நாற்றிப்
'பெருந்தண் கணவீர நறுந்தண் மாலை'
பால்வேறு மரபிற் பலபட வியற்றி
யெலிமயிர்க் கம்பல நிலனுற விரித்து
விரிபிடை யெழுப்பிய வரியணை மீது
வெங்கதிர் ஞாயிறு மணிநெடுங் கோட்டிற்
றங்கி யிருந்த தகைமை போலவும்
வான்கதிர் மதிய மீன்கணஞ் சூழத்
தான்பொலிந் தெழுந்த தலைமை போலவு
மறுமுகத் தொருவன் குறுநகை யிலங்க
நசைகெழு விழிக டிசைமுகம பாப்பிக்
குன்றுத் திருவொடும் விளங்கக் கண்டுநனி
மெய்ந்நிலைத் தொண்டர் தந்நிலை யறியார்
விழிநீர் சிந்த மொழியிடை குழற
வுச்சிக் கூப்பிய கையினர் பழிச்சி
யருட்குறிப் புணர்ந்தாங் கமைவொடு நிற்ப
வெருவரு நோக்கமொடு மரம்போ லாகி
யருணிலை யுணரேன் றெருளின் றியோடிக்
குடந்தங் கொண்டெதிர் நின்றனெ னாக
மடந்தபு சின்மொழி மகிழக் கூறி..........

யன்புறு புலவோ யஞ்ச லோம்புமதி
காலங் கடந்த கோல வைப்பி
னிகரா வின்ப மிகைபடை நுகர்ந்து
கடைவழி யில்லா நிலையொடு பொலிகுவை
யென்றுபல நலனுரை பின்னையுங் கூறித்
தன்மருங் கிருந்தோர குயிப்ப வவனுமென்
னங்கை பற்றிச் சென்று கொங்குகமழ்
நீராடு துறையி னிறுவிய வளவை
கார்மின் னனைய வேர்கெழு மகளிர்
குறுநகை மிளிரவென் னருகிற போந்து
மாசு பொதிந்த பாசி யாகி
யீரும் பேனுந் தீரா துறையுமென்
புன்றலைக் குஞ்சி புணர்ப்பற வுளரிப்
புழுகுநெய் யுரைத்துப பனிநீ ராட்டி
யீரம் புலர வின்புகை யூட்டித்
தாமெனை விடுத்துப் போக வேணேன்
பிறிதோர் நலவிடம புகுத்த வாண்டைக்
கவினகெழு சிலதர் விரையினர் புகுந்து
விண்ணோர் வேந்தன் கண்ணெனப் பொலிந்தவென்
றுன்னற் சிதாஅர் நீக்கி முன்னிய
வரவுரி யன்ன வாடை யுடீஇக்
கலவைச சாந்தம புலர வட்டி
முகைநெகிழ்ந்து விரிந்த தகைசா னறுமலர்
பிணைய லாக்கி மணமுற மிலைச்சித்
துளங்கொளிக் கலன்கள் விளங்க வணிந்து
மணித்தவி சிட்டதன் மிசையெனை யிரீஇக்
குமரி வாழையின் குருத்தகம் விரீஇ
யறுசுவை கறியு மடிசிலுந் துவையும
வெறிகமழ் கனியு நறுநெயும பாலுந்
தீஞ்சுவைத் தயிருந் தேங்கனி பழனுங்
கன்னலும் பிறவுந் துன்ன வியற்றிக்
கடும்பசி தீரயான் மிசைதொறு மிசைதொறு
மிடும்பை யின்றி யிடையிடை யிடுபு

பாழ்வயி றென்று நிரம்பப் பெய்தலிற்
பெரும்பொரு ளெய்திய வறிஞனி னெல்லாந்
திருந்தபி னென்னைப் பொருந்தக் கூஉ
யென்னையோ ரிடத்திற் றுவென்னைச் செலுவ, வாங்குப்
பொழிநீ றிட்டு விழிமணி தாங்கிக்
காந்தள் போலச சேந்தொளி ரங்கையிற்
சிவஞான போத நவையறச சிவணிப்
பழுதறு சீடா குழுவொடு சூழ
வான்கதிர் மண்டில மீங்கு வந்ததுபோல
றிருவொடு விளங்கு முருகுபொற் றவிசிற்
கன்மன முருக்குங் காண்டகு கோலமொடு
மென்மன முருக்கி யெழுந்தினி தருளிய
சோம சுந்தர குரவனைக காணூஉச
செய்குவ தறியேன் மெய்தடு மாறி
நிலம்பட வீழ்ந்து கலங்கி நிற்ப
யாரையோ வெங்க ளறுமுகத் தையன்
றந்ததோ ரருளின் வந்தனை போலு
நல்லை நல்லை யெல்லையில் கால
மழியாப் பேற்றி னிலையினை விழுமியை
செவ்வியை பெரியை யெளவிய மிலையென்
றினியன பலவும் பணிவரக் கிளந்துதன்
மலர்க்கையென் புன்றலைச சேர்த்திப் புலப்பட
நீயே, யுடம்புமப் பொறியுங் கடம்படு கரணமு
மறிவும் வளியு மல்லை யறிவாய்ச்
செறியுமப் பெற்றியை யற்றவை யறியாப்
பண்பின வனையை யாயினு முன்பே
படல மூடிய கண்ணின் மிடைபடு
மாசு பொதிந்த நீர்மையை வீசிய
வொளிப்பிழம் பாகி வெளிப்படு முருக
னொனுது சுரந்த வருளின னாகலி
னின்னை மறைத்த துன்னிரு டிரந்து
தன்னருட் பொலிவா னின்னறிவு கொளீஇ
யருகா வின்பந் தருதற் பொருட்டு

மெய்ந்நிலை யிருத்தி மாசு போக்கித்
தன்னிலை நினக்குத் தந்தனன் கோடியென்
றுறுதி கூறி விடுப்பத் தேறிப்
பன்னிரு கையன் முன்ன ரெய்தி
யிமயம் பூத்த பனிகெழு சுனையி
னமையா தாடிய வுமைதரு புதல்வோ
யெரிவிழித் திமைக்குந் திருநுதற் றந்தைக்
கொருமொழி விரித்த தெருளுறு முணர்வோய்
வானோ ருறுகண் டீர்ப்ப மேலோ
ராவடி வேலைக் கையினி லெடுத்தோய்
வேந்தன் றந்த வேந்தெழிற் செல்விக்கு
வரைபுரை மார்பம் வரையா தளித்தோய்
குன்றவர் வளர்த்த பொன்றிகழ் வள்ளிக்குக்
கொழுகொம் பாகிய விழுமிய தோளோ
யருந்தமிழ்க் கீரனைப் பொருந்திக் காத்தோ
யெம்மனோர்க் கெளிவந்த செம்மை யாள
வொருவ சிறுவ கருமையின் முருக
மறைமுடி தன்னி னிறைதிரு வுருவினை
கணனு முணர்வுங் கதுவாப் பெற்றியை
யைம்பெரும் பூதமு மாகி நின்றனை
யுலகுநின் னுருவே யொளிகணின் விழியே
யலகிலாச் சமயத் தவ்வவர் தமக்குப்
பலவே றுருவி னிலவுனை நீயே
யாறுநின் முகமே யைந்துநின் வடிவே
நான்குநின் மொழியே மூன்றுநின் கண்ணே
யிரண்டுநின் றுணையே யொன்றுநின் வேலே
மருண்ட வுணர்வொடு மாட்சிமை யெய்தா
முருட னேற்குந் திருவரு டருகையென்
றியானறி யளவையி னோதத் தானுவந்து
குறிப்பரு மின்பத்துப் பிறக்கின னெனையே, யதுமுத
லின்ப மார்ந்தங் கிருத்த லல்லது
துன்ப மென்ப தறியே னன்பொடு
நீயு மவன்வயிற் செலினே பாயரு

ளொருவர்தந் தருகுவன் மன்ற மருவந்து
தலைப்பெயன் மாரியின் மலைப்படு நீத்தம்
பைந்நிறப் பீலியுஞ் செந்நிறத் துகிரும
வேழ மருப்புங் காழகிற் றுணியு
மொருங்கு வரன்றி மருங்கு விரைஇக
குண்டுகட் படுகரின் மண்டி நிறைந்தாங்
கவலக் கவலையு முவலைச் சுவையு
முரணுறு வறிவுந் திருகிய செருக்கு
முதலறப் பெயர்த்துச் சிதையா தோடி
யன்பி னிறைந்த வின்ப வெள்ளத்துப
பழியாக் கடும்பொடும விழுமிதிற் றுவன்றி
யெழுல கழியினு மழியா
தாழி யூழியும் வாழ்மதி சிறந்தே. (௨௮)

### காப்புக்கைம்மிக்குக்காமம்பெருகியுரைத்தல்.

சிறந்த பொருளொற்றிச் செவ்வே ளிவரை
மறந்திங் குயிர்வாழ மாட்டோம — பறந்தோடித்
திண்டோ டழுவ மின்றேற் செழுவரையைக்
கண்டேறிக் கீழ்விழுவங் காண். (௨௯)

### அடியுறையிடுதல்.

காணப் பெறாதவொர் காட்சியை யேனுங் கசிந்தவன்பாற்
பேணப் பெறுமுக கருவியிற் காண்பர் பிறங்குமொற்றி
வாணப் பெருந்தகை யென்பது கொண்டு வழங்குமன்பாற்
பூணப் பெறுமிந்த மும்மணிக் கோவையும் பூங்கழற்கே. (௩௰)

## திருவொற்றிமுருகர்

## மும்மணிக்கோவை

முற்றும்.